Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

Deposition of P.W. 7 (L.W. 7 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.பழனிசாமி

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 10.11.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவள்ளிகோம்பையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இறந்து போன கந்தசாமி என் உடன்

பிறந்த தம்பி. ஆஜர் எதிரி என் தம்பியின் நிலத்து பக்கத்துக்காரர். பொது வழி தடபிரச்சனை காரணமாக எனது தம்பிக்கும், எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்தது. 28.05.2022ம் தேதி சனிக்கிழமை காலை 08.00மணிக்கு எனது தம்பிக்கும், எதிரிக்கும வாய்சண்டை ஏற்பட்டது. இரவு 08.00மணியளவில் என் தம்பியின் சூளையின் அருகில் ஆஜர் எதிரியும், 5 பேர்களும் ஒரு வண்டியில் வந்ததாக என் தம்பி என்னிடம் சொன்னார். நான் காலையில் பேசி கொள்ளலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டேன். விடியற்காலை 6 மணிக்கு என் தம்பி பால் எடுத்து கொண்டு ஸ்கூட்டியில போனதாகவும், விநாயகர் முன்பு குபேந்திரன் வண்டியை வழிமறித்து வலது காதில், வலது காது, கழுத்தில் 4, 5 வெட்டியதாகவும், மாதம்மாவும், சாந்தாவும பிடித்து தடுத்ததாகவும், அவர்களை தள்ளிவிட்டு விட்டதாகவும், பின்பு ஆறுமுகமும், விஜயும போனதாகவும், பிறகு எனக்கு தகவல் சொன்ன பிறகு நான் போய் பார்த்த போது என் தம்பி இறந்து கிடந்தார். பின்பு என் தம்பி மனைவி பெரும்பாலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பிறகு பிரேதம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்று போஸ்ட்மார்டம் செய்து எனது தம்பியின் பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் வீடு மெயின் ரோடில் உள்ளது. என் வீட்டை தாண்டி தான் கந்தசாமி வீட்டிற்கு போகவேண்டும். பென்னாகரம் - மேச்சேரி ரோடு வடக்கு தெற்காக போகிறது. அந்த மேற்கு பக்கம் போனோல் கோவள்ளிகோம்பைக்கு செல்கிறது. மேச்சேரி பென்னாகரம் ரோடிலிருந்து மேச்சேரி போகும் ரோடு தார்ரோடு. தார்ரோட்டிற்கு வடக்கு பக்கம் கந்தசாமியின் செங்கல்சூளை உள்ளது என்றால் சரிதான். தெற்கு பக்கம் குபேந்திரனின் கோழிபண்ணை, வீடுள்ளது. கோவள்ளிகோம்பை பொது ரோடு என்பதால் அவர்களுக்குள் வழி பிரச்சனை இல்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கந்தசாமி மாமனார் ஊர்புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்ததை அரசாங்கம் அவரை காலி செய்து பால்வாடி, ரேசன்கடை, கால்நடை மருத்துவம் கட்டுவதற்காக நிலத்தை அரசாங்கம் எடுத்ததால் எதிரி முன்னின்று ஊர்காரர்கள் சார்பாக மனு கொடுத்ததால் எதிரிக்கும், கந்தசாமிக்கும் முன்விரோதம் என்றால் சரியல்ல. ஏற்கனவே பால்வாடி, ரேசன்கடை, கால்நடை மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

2) மேச்சேரி - கோவள்ளிகோம்பை போகும் ரோடு தார்ரோடு இல்லை மண்ரோடு தான் என்றால் சரியல்ல. கந்தசாமி வீட்டிலிருந்து ரோட்டிற்கு போகும் வழியில் வீடுகள்

அவ்வளவாக இல்லை என்றால் சரியல்ல, வீடுகள் உள்ளது. சம்பவம் மே மாதத்தில் நடந்தது, அது வெயில் காலம். மே மாதம் என்பதால் பால் கெட்டு விடும் என்பதால் பால்வண்டி வந்து 5மணிக்கெல்லாம் எடுத்து செல்லப்பட்டது என்றால் சரியல்ல. கந்தசாமி காலை 5 மணிக்கெல்லாம் பால் எடுத்து சென்று விட்டார் என்றால் சரியல்ல. எதிரி கந்தசாமியின் மாமனாருக்கு எதிரா முன்னின்று மனு கொடுத்ததால அவா மீது பொய்யாக சாட்சியம் என்றால் சரியல்ல. என் மீது ரோடின் மீதுள்ளது. கார் போனால் இரவு நேரத்தில் சத்தம் கேட்கும் என்றால் சரிதான், நான் காா போனதை பார்க்கவில்லை. கந்தசாமி என்னுடைய அண்ணன் என்பதால போலிசாா போட்ட வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

| | | | | |
|---|---|---|---|---|
| | | | } | Prosecution |
| Deposition of | P.W. 8 | (L.W. 9 ) | } | Defence |
| | | | } | |

Name of the Witness : திரு.சிவா

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 10.11.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் கோவள்ளிகோம்பையில் வசித்து வருகிறேன். கோவையில் மருந்தாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜா் எதிரியை எனக்கு

தெரியும், அவர் எங்கள் ஊர்காரர், அவர் தான் என் அப்பாவை கொலை செய்தார். எதிரி குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் 3 வருடங்களாக பொது வழி பிரச்சனை இருந்து வந்தது. 28.05.2022 காலை 08.00மணியளவில எங்கள குடும்பத்தாருக்கும், குபேந்திரன் குடும்பத்தாருக்கும வாய தகராறு ஏற்பட்டது, அப்போது நான் வீட்டில் இருந்தேன். அன்று இரவு 8 மணியளவில் என அப்பா எங்களின செங்கல சூளை வழியாக ஒரு வெள்ளை நிற கார் போனதாகவும், அதில் குபேந்திரன் இருந்ததாகவும் சொன்னார். அடுத்த நாள் காலை என் அப்பா வழக்கம் போல் 6 மணிக்கு பால் எடுத்து கொண்டு TVS ஸ்கூட்டியில் போனதாகவும், விநாயகர் கோவில் அருகே என் அப்பாவை பின் தொடர்ந்து வந்த எதிரி குபேந்திரன் என் அப்பாவை வழிமறித்து பின்னாலிருந்து பின பக்க கழுத்தில கொடுவாளால் வெட்டியுள்ளார். அப்போது மாதம்மாள், சாந்தா குபேந்திரன் வெட்டுவதை பார்த்து தடுக்க வந்துள்ளார்கள். அவர்களை தள்ளிவிட்டு ஸ்கூட்டியில் உட்கார்ந்திருந்த என் அப்பாவை மாறி மாறி வெட்டியுள்ளார். அவர்கள் கூச்சல் போடவே ஆறுமுகம், விஜயும் வரும் போது அருவாளை எடுத்து கொண்டு வண்டியில போனதாக சொன்னார்கள். பிறகு அதை பற்றி கேட்டு சம்பவ இடம சென்ற பார்த்தேன். நான் பார்க்கும் போது என் அப்பாவின் கழுத்தில் ரத்தம்

வழிந்து இருந்தது, என் அப்பா இறந்து விட்டார். நானும், எனது அம்மாவும் பெரும்பாலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என் அப்பா இறந்த போது நான் 4ம் ஆண்டு கோபிசெட்டிபாளையத்தில் படித்து கொண்டிருந்தேன். அப்போது Study Leave என்பதால் வீட்டில் இருந்தேன். எனக்கு அரியர் இருந்ததால் நான் கல்லூரியிலிருந்து வீட்டிற்கு வந்து விட்டேன். சனிக்கிழமை தகராறு நடந்த போது நான் பார்த்தேன், வீட்டில் தான் இருந்தேன். மெயின் ரோடிலிருந்து எங்கள் வீட்டிற்கு வருவதற்கு சிமெண்ட் ரோடு உள்ளது. அதில் வரகூடாது என்று எதிரி குபேந்திரன் தடுத்தார். செங்கல்சூளை ரோட்டிற்கு வடக்கு பக்கமாக உள்ளது. ரோடிற்கு தெற்கே குபேந்திரனின் கோழிப்பண்ணை, வீடுள்ளது. என் ரோட்டிற்கு எதிரே அவரது வீடுள்ளது. எங்கள் வீட்டை தாண்டி நிறைய வீடுகள் உள்ளது. அதையும் தாண்டி மலைபகுதியுள்ளது. எதிரிக்கும், எங்களுக்கும் பொது வழி சம்பந்தமாக எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. அது பொது வழி என்பதால் அதில் எல்லோருக்கும் உரிமையுள்ளது என்றாலும், எதிரி பொது வழியை தடுப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

2) நான் 12ம் வகுப்பு வரை ஊரிலே தான் படித்தேன். குபேந்திரன் எப்போதும் லாரி ஓட்ட சென்று விடுவார் என்றும், அவ்வப்போது ஊருக்கு வருவார் என்றால் சரிதான். எதிரியின் மனைவியும், என் அம்மாவும் எதிரியின் கோழிப்பண்ணையை கூட்டாக சேர்ந்து பார்த்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. கொரானாவிற்கு பிறகு தான் எதிரி ஊருக்கு வந்தார் என்றால் சரிதான். என் தாத்தா பெயர் ராஜி. அவர் ஊர்புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்தார் என்றால் சரியல்ல. ஊர்புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்ததை அரசாங்கம் அவரை காலி செய்து பால்வாடி, ரேசன்கடை, கால்நடை மருத்துவம் கட்டுவதற்காக நிலத்தை அரசாங்கம் எடுத்ததால் எதிரி முன்னின்று ஊர்காரர்கள் சார்பாக மனு கொடுத்ததால் எதிரிக்கும், கந்தசாமிக்கும் முன்விரோதம் என்றால் சரியல்ல. என் அப்பா ஊருக்கு நல்லதை செய்வதை தடுப்பதால் என் அப்பாவிற்கும், ஊர்பொதுமக்களுக்கும் பகை என்றால் சரியல்ல.

3) என் அப்பா நைட் கார் வந்ததாக சொன்னார், அந்த காரை நான் பார்க்கவில்லை. 06.30, 07.00 மணியளவில் என் அப்பா இறந்த விவரம் எங்களுக்கு தெரிய வந்தது. நானும், என் அம்மாவும் தான் காவல் நிலையத்திற்கு போனோம். புகாரை 08.00 மணியளவில் கொடுத்தோம். புகாரை காவல் நிலையத்திலிருந்த ஒரு பெண்மணி எழுதி கொடுத்தார்.

அந்த பெண்மணி பெயர் தெரியாது, அவர் போலிஸ் இல்லை. நான் பதட்டமாக இருந்ததால் புகாரை நான் எழுதவில்லை. நான் சம்பவத்தின் போது ஊரிலே இல்லை என்றாலும், சம்பவத்தை கேள்விபட்டு கோபிசெட்டிபாளையிலிருந்து பிற்பகல் வந்தேன் என்றால் சரியல்ல. சனிகிழமை என்ன நடந்தது என்று தெரியாது என்றாலும், என் அப்பா என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.